தோழர் S.K.வியாஸ் மறைந்தார்



மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனத்தின் முன்னாள் பொது செயலாளர் தோழர் S.K.வியாஸ் அவர்கள் 13.02.2015 அன்று ஜெய்பூர் மருத்துவமனையில் காலமானார். 85 வயதான தோழர் S.K.வியாஸ் அவர்கள் இதய நோய் காரணமாக ஒரு சில தினங்களுக்கு முன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

1967ஆம் ஆண்டு முதல் சுமார் 40 ஆண்டு காலம் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனத்தின் பொது செயலாளராக சீர்குலைவு சக்திகளுக்கு எதிராக ஒரு புறம் சம்மேளனத்திற்கு உள்ளும், அரசின் நாசகர கொள்கைகளுக்கு எதிராகவும் உறுதியாக போராடி வந்த தோழர் S.K.வியாஸ் தற்போது ஓய்வூதியர்களின் உரிமைகளுக்காக BCPC மற்றும் NCCPA ஆகிய சங்கங்களின் பொது செயலாளராக பணியாற்றி வந்தார்.

S.K.வியாஸ் அவர்களின் மறைவு மத்திய அரசு ஊழியர்களின் தொழிற்சங்க இயக்கத்திற்கும், ஓய்வூதியர் இயக்கத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.